# ஓடைகளில் செல்லுமா எங்கள் ஓடங்கள்

## ஒரு மீனவ சமூகத்தின் ஏக்கம்

மன்னார் தீவிலுள்ள ஒரு அழகிய சிறிய கிராமம் பள்ளிமுனை. இது மன்னார் நகரத்திலிருந்து 1.5 கிலோ மீற்றர்கள் தொலைவில் அமைந்துள்ளது. இங்கு வசிக்கும் மக்களில் 90 சதவீதமான மக்கள் மீன்பிடித் தொழிலையே நம்பியிருக்கின்றனர். இத்தொழில் மூலமே இவர்களது அன்றாட வாழ்க்கை நகர்கின்றது. இக்கிராமமானது சுமார் 1 கிலோ மீற்றருக்கு மேற்பட்ட பிரதேசத்தை கண்டமேடை நிலப்பரப்பாக அதாவது ஆளமற்ற கடற்பரப்பை கொண்டுள்ளது. இங்கு ஒரு வருடத்தின் ஆறு மாத காலம் அதாவது ஐப்பசி தொடக்கம் பங்குனி வரையான காலப்பகுதி பெருக்கு காலம் அதாவது கடல் நீரானது கடற்கரைவரை காணப்படும் அதேநேரத்தில் அடுத்த ஆறுமாதகாலம் அதாவது சித்திரை தொடக்கம் புரட்டாதி வரையான காலப்பகுதி வற்றுக்காலம் எனவும் இந்தநாட்களில் பெருங்காற்று வீசுவதோடு கடற்கரையானது நீரின்றி வறண்டு காணப்படும் தன்மைகொண்ட இரண்டு வேறுபட்ட புவியியல் அம்சத்தைக் கொண்ட பிரதேசமாக காணப்படுகின்றது.

பெருக்க காலத்தில் எந்தவொரு இடையூறுமின்றி மீன்பிடித்தொழிலை மேற்கொள்ளும் இம்மீனவர்கள் வற்றுக்காலத்தில் பெரும் சிரமத்தின் மத்தியிலும் மாற்று வழி ஏதுமின்றி இத்தொழிலையே மேற்கொள்கின்றனர். அதாவது வற்றுக்காலத்தில் கடற்கரை வறண்டு விடுவதினால் ஆளமற்ற பகுதியிலுருந்து ஆள்கடலுக்கு செல்லும் ஆற்றுக்கு தங்களது படகுகளை கொண்டு செல்ல முடியாமல் பெரிதும் சிரமத்தினை அனுபவிக்கின்றனர். இந்த நாட்களில் இம்மீனவர்கள் தொழில் இன்றி பெரிதும் அவதியுறுகின்றனர். கடல்நீரானது கரைக்கு பரபவும்வரை காத்திருக்கின்றனர் இவர்களின் இந்த காத்திருப்பானது பல சந்தர்ப்பங்களில் படகுகளை ஆழ்கடலுக்கு இழுத்துச் செல்வதற்கு முடியாமல் போவதோடு அடிப்படையான சவால்களுடன் முயற்சித்தாலும் நண்பகலையும் தாண்டி விடுகின்றது. இதனால் இந்த காலப்பகுதியில் இவர்கள் தொழிலின்றி பெரிதும் சிரமத்தை அனுபவித்து வருகின்றனர். இக்கிராமிய மீனவர்கள் தங்களது முயற்சியினால் ஓடை ஒன்றை தோண்டுவதற்கான முயற்சியில் இறங்கினர். ஆனால் மக்களினால் சிரமத்துடன் ஆரம்பிக்கப்பட்ட குறித்த செயற்பாடானது சில மணித்தியாலத்திற்குள் நிறைவு பெறுகின்றது. குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் கடல் நீர் பரவ ஆரம்பித்துவிடுவதனால் வேலையை நிறுத்தவேண்டி வந்துள்ளது. அடுத்தநாள் பார்கும் போது ஏற்கனவே தோண்டப்பட்ட ஓடையும் நீரோட்டம் காரணமாக மீண்டும் மூடப்பட்டு காணப்பட்டும். இவ்வாறு சிறிது சிறிதாக தோண்டப்பட்ட ஓடையில் ஒருபடகை இழுக்கும் அளவிற்கே தண்ணீர் காணப்படும் இதனால் நீண்ட வரிசையிலேயே படகுகளை இழுத்தும், தள்ளியும் மீன்பிடித்தொழிலை மேற்கொள்கின்றனர்.

நீண்ட காலமாக இவ்வாறானதோர் நிலையினையே மக்கள் அனுபவித்து வருகின்றனர். மேலும் தற்போது அவ் ஓடைகள் இன்னும் அதிகமாக மூடப்பட்டுள்ளதால் மக்கள் பெரிதும் அசௌகரியங்களுக்கு ஆளாகியுள்ளனர்.

இது தொடர்பாக பள்ளிமுனை மீனவர் சங்கம் பலமுறைகளில் உரிய அதிகாரிகளுக்கும் அரசியல் பிரதிநிதிகளுக்கும் அறிவித்தும் இது தொடர்பான எந்தவொரு செயற்பாடுகளும் மேற்கொள்ளப் படவில்லை எனவும், எமது மீனவர்கள் பல சிரமத்தை அனுபவித்து வருவதாகவும் மீன்பிடிச்சங்க தலைவர் தெரிவித்தார். இது தொடர்பாக இப்பிரேசத்தில் வாழும் மீனவர்களில் சிலரை வினவியபோது சரியானதொரு ஓடையின்மையால் சரியான நேரத்திற்கு மீன்பிடித்தொழிலை மேற்கொள்ள முடிவதில்லை என்றும் ஒவ்வொரு நாளும் படகுகளை இழுத்துச் செல்வதனால் படகுகளின் கீழ் பகுதி தேய்வடைந்து வருவதாகவும் காலப்போக்கில் படகை பாவிக்க முடியாமல் போவதாகவும், தங்களது தொழிலும், படகுகளும் பாதிக்கப்படுவதோடு குடும்பமும் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர். இந்த நிலை தொடருமானால் மீன்பிடித்தொழில் செய்ய முடியாத நிலை ஏற்படுமோ என்ற அச்சம் நிலவுவதாகவும், இம் மீனவர்கள் மேலும் தெரிவித்ததுடன் தங்களது இந்த ஓடைப் பிரச்சினைக்கான சரியானதொரு தீர்வைப் பெற்றுத் தர அரசாங்கம் வழிவகுக்க வேண்டும் என தெரிவித்தனர்.



*எ.பி. அன்ரனிதாஸ் றோச்*

*பள்ளிமுனை,*

*மன்னார்*